24th July 1962]

Free medical aid for Legislators and their families

* 610 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state— 9 30 a.m.

(a) whether Government have any proposal to give free medical aid to the Legislators' and to the members of their family ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) and (b) No, Sir, It is, however, proposed to make provision in the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951, for *not* taking into account the salary drawn by the members of the legislature as income for affording them and the members of their families, medical attendance and treatment in Government Medical Institutions in the State.

திரு. எம். எஸ். செல்வராஜன் : குறைந்த பட்சம் சட்டசபை அங்கத்தினர்களுக்காயினும் ஒருக்கால் பெரிய வியாதிகள் இருக்குமானல், அதற்காக மருந்துக்கு அதிக செலவுகள் ஏற்படக்கூடிய சிரமங்கள் உண்டு. என்பதை உணர்ந்து அவர்களுக்கு இதுபோனறு மருத்துவ வசதி செய்து கொடுத்து சலுகை அளிப்பது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றி இந்தக் கேள்வியில் உப கேள்வியாக போடுவது அவ்வளவு சரியல்ல என்று நான் நினைக்கிறேன். ஏதாவது குறிப்பிட்டு யோசனைகள் சொன்னல், அதைப்பற்றி மேலும் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. டி. கோசல்ராம் : பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இம் மாதிரி இலவச மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்களே, அதைப் பரிசீலனை செய்து, அம்மாதிரி இங்கும் செய்து கொடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாராளுமன்ற உறுப்பினர்கள் விஷயம் வேறு. அவர்களுக்கு அங்கே என்னென்ன செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அங்கிருக்கிற நிலைமை வேறு, இங்கிருக்கிற நிலைமை வேறு.

திரு. டி. கார்சா கவுடர் : குறைந்த பட்சம் இந்த ஐந்து ஆண்டுகளுக்காவது இந்தச் சபை அங்கத்தினர்களுக்கு ஒரு விதமான நோயும் வரக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்கள் கடவுளைப் பிரார்த்திப்பார்களா என்று கேட்கிறேன். (சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய பிரார்த்தனையை கடவுள் நிச்சயம் எற்றுக்கொள்ளுவார். (சிரிப்பு).

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன .

II.-ABSENCE OF THE MEMBERS OF THE D.M.K. LEGISLATURE PARTY.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் பிரதான எதிர்க்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கடந்த சில தினங்களாக இந்தச் சபைக்கு வரவில்லை. அதற்கு என்ன காரணம் என்பது, ஒரு வேளை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ, சபைக்குத் தெரியவில்லை. கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ, அதுவும் எனக்குத் தெரியாது.

ஜூலை 19-ம் தேதியன்று அவர்கள் தொடங்கிய ஒரு இயக்கத்தை ஒட்டி பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டு வருகின்றன. சென்னை நகரத்தில் போலீஸ் பலரைக் கைது செய்திருக்கிறார்கள் ; பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பொதுச் சொத்துக்களுக்கு விரயம் ஏற்படுவது போன்ற

சம்பவங்களும் நடந்திருக்கின்றன. பலர் கைது செய்யப்படுவதும் நடந்திருக்கிறது, நேற்றைய தினம் வரையில் கூட கைது செய்யப்படுவதாகவும், போலீஸார் சேரிகளில் சென்று பலரைப் பிடிப்ப தாகவும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையை நாம் என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்கள் அது பற்றி ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலம் கேட்டுக் கொள்ளுவதோடு கூட, அதை யொட்டி விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் நான் கோருகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஜூலை 19-ம் தேதியே தங்களிடம் குறிப்பிட்டேன். அன்று முக்கிய மான எதிர் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 50 அங்கத்தினர்களில் ஒருவரும் சபைக்கு வராமல் இருந்தது பற்றி தங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமா என்று நான் கேட்டேன். தங்களுக்கும் தெரியாது என்று சொன்னீர்கள். அதே நிலைமை தான் என்னைப் பொறுத்த மட்டிலும் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டிலும் இன்னும் அந்த அங்கத்தினர்கள் ஒருவரும் சபைக்கு வராததற்கு என்ன காரணம் என்று நான் சொல்லுவதற்கில்லை. எனக்கு அவர்கள் ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆனால், அன்றைக்கு மறு நாள் நான் தெரிவித் தேன், 19-ம் தேதி சம்பவங்களை யொட்டி போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சம்பவம் நடந்தது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அதையொட்டி அமைதியை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறு என்றால், அது கோர்ட்டார் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

ஆனால் இன்று காலையிலே கனம் அங்கத்தினர் திரு. எம். கலியாண சுநதரம் அவர்கள் என்னிடம் மூன்று அவசர கேள்விகளை அளித்திருக் கிறார்கள். அந்த அவசரக் கேள்விகளை நான் ஏற்றுக் கொண்டிருக் கிறேன். கூடிய வரையில் முயற்சி செய்து நாளை காலையிலேயே அவை களுக்கு விடையளிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒரு கால் நாளைக்கு மூன்று கேள்விகளுக்கும் விடைகள் தயாராகவில்லை என்றால், நாளை மறு தினம் நிச்சயமாக அவைகளுக்கு விடையளிக்கலாம் என்று நினைக் கிறேன். கனம் அங்கத்தினர் எதிர்பார்க்கிற தகவல்கள் அந்த விடைகளிலே வந்துவிடும். அதற்கப்புறம் மேற்கொண்டு அவர்கள் விவாதிக்கவேண்டு மென்றால், அதற்கு விதிகள் அனுமதித்தால், தாங்களும் அனுமதித் தால், இந்த மன்றமும் அனுமதித்தால் அந்த விவாதம் நடப்பதுபற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. அப்பொழுது மேலும் நிலைமையை விளக்கு வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

Sri M. Kalyanasundaram rose . . . .

MR. SPEAKER : What more does the hon. Member want to say ?

திரு. மீ. கல்யாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கேட்டதை கனம் அமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டார்களோ அல்லது புரிந்துகொண்டுதான் பதில் சொல்லவில்லையோ தெரியாது. திரா விட முன்னேற்றக் கழகத்தினர் 19-ம் தேதி நடத்திய இயக்கம் வேறு. அதையொட்டி சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. தொடர்ந்து சிலரை கைது செயயக்கூடிய சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இது நேற்றோடு முடிந்து விட்டதா ? அல்லது இன்னும் ஏதாவது நடந்து கொண்டிருக்கிறதா ? (கனம் திரு கு. காமராஜ் எழுந்திருந்தார்). அமைச்சர்கள் சொல்லுவதற்கு எப்பொழுதும் சந்தர்ப்பம் உண்டு. நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அதனால் பலருக்கும் இருக்கக்கூடிய நிலை என்ன என்பதை நாம்—இந்த சபையிலே உள்ளவர்கள், புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு அறிக்கையைக் கோருகிறேன். நான் கொடுத்திருக்கக்கூடிய கேள்விகளில்

24th July 1962] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

சில குறிப்பிட்ட பிரச்னைகளைப் பற்றித்தான் கேட்டிருக்கிறேன். அந்தப் பிரச்னைகள் இந்த நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தம் உடையனவாக இருக்கலாம் இருப்பினும், நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் யாரையும் குறை கூற வேண்டும் அல்லது கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கேட்க வில்லை. நாட்டில் நடப்பது என்ன, அதன் விவரங்கள் யாவை அதுபற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் எனது கவலையே தவிர, வேறு ஒன்றுமில்லை. பலவிதமாகப் பேசப்படுகிறது. ஒவ்வொரு பத்திரிகையும் பல தரப்பட்ட செய்திகளையும், அறிக்கைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. உண்மையான நிலை என்ன என்பதை இந்தச் சபையும், மக்களும் புரிந்து கொள்ளுவதற்கு உரிமை உண்டு. அதை கனம் அமைச்சர்கள் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் என்னுடைய கவலை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் கனம் அங்கத்தினர் சொல்வதை நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிறேன். என் சக்திக்கேற்றவாறு புரிந்து கொண்டு தான் விடையளித்தேன். நேற்று "அரெஸ்டு" செய்தார்களே, எதற்கு அரெஸ்டு செய்தார்கள், இன்று அரெஸ்டு செய்வார்களா, நாளைக்கு அரெஸ்டு செய்வார்களா என்று சொல்ல முடியாது. நாட்டிலே அமைதியை நிலை நாட்டுவது போலீஸாரின் பொறுப்பும் கடமையும் ஆகும். என்ன செய்கிருர்கள், என்ன செய்வார்கள் என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் அத்துமீறி ஏதாவது செய்திருந்தால், இந்த மன்றம் அதைக் கண்டிக்க உரிமை உண்டு. அதற்குச் சமாதானம் சொல்லுவதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனல், எந்த வகையிலே, எந்தச் சந்தர்ப்பத்திலே செய்கிருர்கள் என்ற அந்த விவரங்கள் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. சில விஷயங்களைக் குறிப்பிட்டு கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிருர்கள். அதற்கும் முடிந்தால் நாளை அல்லது நாளை மறு தினம் விடையளிக்கிறேன் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் எதிர்பார்க்கும் விவரங்களெல்லாம் அந்த மூன்று அவசரக் கேள்விகளுக்கு நான் விடையளிப்பதில் வந்துவிடும். அதற்கு மேலே விவாதம் செய்ய வேண்டுமென்ருல், அதை விதியின்படி, தங்கள் அனுமதிப்படி செய்து கொள்ளலாம் என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நேற்றைய தினம் நான் தங்களிடம் 'பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூட்டத்தில்" கூறியபடி, 57-வது விதியின் படி நான் ஒரு பிரேரேபணை கொடுக்கிறேன். அதைச் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் ஆதரிக்கிருர்கள். அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர் : அது கொடுக்கப்பட்டால், கவனிக்கப்படும்.

III.—ADJOURNMENT MOTION—*re*.

ARREST OF SOME MEMBERS OF THE D. M. K. LEGISLATURE PARTY

MR. SPEAKER: The hon. Member Sri T. L. Sasivarna Thevar has given notice of an adjournment motion regarding more or less the same matter that had been raised before, viz. the arrests of some D M.K. Members and the condition prevailing in the City and the State.

I have already ruled out of order two adjournment motions on this matter, one given notice of by the hon. Member Sri Saw.Ganesan, Leader of the Swatantra Legislature Party and the other given notice of by two members of the Opposition. These adjournment motions were about the arrest of some D.M.K. members and I have already ruled them out of order. Since the subject matter of this adjournment motion also is one concerning the ordinary administration of law and order in the State, I rule that this motion also is out of order.